[22nd April 1959

SRI V. K. KOTHANDARAMAN : தாலுக்கா ஆபீஸ்களில் இருக்கக் கூடிய கக்கூஸ்களைக்கூட உபயோகிப்பது இல்லை. அங்கு இங்கு போய் விடுகிறார்கள் என்றார். ஆண்கள் அப்படிச் செய்யலாம். கக்கூஸ்கள் இல்லாத காரணத்தினால் பெண்கள் — கொஞ்சதூரம் போவதற்குள் இங்கே பேர் கூப்பிட்டு இல்லையென்ற காரணத்தைக்கொண்டு அப்படியே அவர்கள விஷயத்தைத் தள்ளிவிடக்கூடிய நிலைமைகூட ஏற்படுகிறது என்பதை உணர்ந்து உடனடியாக கக்கூஸ்கள் கட்ட ஏற்பாடு செய்வார்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : அதை உணர்ந்துதான் இந்த திட்டம் இப்போது ஆலோசனையில் இருந்து வருகிறது.

SRI T. R. RAMAMIRTHA THONDAMAN : தாலூகா ஆபீஸ்களில் உள்ளவர்கள் அதிக வேலை செய்யவேண்டியிருக்கிற காரணத்தினால் அங்கே இரவு வேலை செய்கிறவர்களுடைய சௌகரியத்தை உத்தேசித்து மின்சார விளக்குகள் போட்டு தருவதற்கு சர்கார் முயற்சி செய்வார்களா ?

MR. SPEAKER : இந்த கேள்வி கக்கூஸைப் பற்றியது. நீங்கள் விளக்கு பற்றி கேட்கிறீர்கள். The question is out of order.

Kundah Hydro Electric Scheme

* 87 *Q.*—SRI S. M. ANNAMALAI : கனம் மின்சார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) குந்தா மின்சார திட்டம் எப்போது முடிவடையும் ?

(ஆ) அதனுடைய செலவுத் தொகை எவ்வளவு ?

(இ) எவ்வளவு மின்சக்தி அதில் உற்பத்தி செய்யப்படும் ?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) By 1960–61.

(*b*) Rs. 35·44 crores.

(*c*) 180,000 K.W.

Storm—Detecting Radars

* 88 *Q.*—SRI A. VEDARATHNAM : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) இம் மாநிலத்தில் புயல் அறிவிக்கும் Radar கருவி இருக்கிறதா ?

(ஆ) எங்கிருக்கிறது—

(இ) இல்லையானால் அதை அமைக்கும் உத்தேசமுண்டா ?

(ஈ) மத்திய அரசாங்கம் இந்த ராடர்கள் அமைக்கத் திட்டமிட்டிருப்பதில் இம்மாகாணத்தில் எந்த இடமாவது சேர்க்கப்பட்டிருக்கிறதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) & (*b*) Our information is that at present there is no storm-detecting radar in this State.

(*c*) & (*d*) Our information is that a storm detecting radar is proposed to be installed at the Weather Forecasting Office of the India Meteorological Department at Meenambakkam.